www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# இரண்டாம் வகுப்பு

## முதல் பருவம்

### தொகுதி – 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

2 STD Tamil Term I Front.indd 1 07/01/2022 19:19:52

www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*

திருத்திய பதிப்பு - *2020, 2022*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



2 STD Tamil Term I Front.indd 2 07/01/2022 19:19:53

# முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.
அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.
தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



2 STD Tamil Term I Front.indd 3 07/01/2022 19:19:53

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



2 STD Tamil Term I Front.indd 6 07/01/2022 19:19:56

# பொருளடக்கம்




ஜூன்
1. விளையாட்டு உலகம் — 1



ஜூன்
2. சொல்லாதே! சொல்லாதே! — 18



ஜூன்
3. பேசாதவை பேசினால்... — 21




ஜூலை
4. நானும் நாங்களும் — 26



ஜூலை
5. வண்ணம் தொட்டு... — 32



ஆகஸ்டு
6. என் கற்பனையில் — 36



ஆகஸ்டு
7. விட்டுச் செல்லாதே — 43



செப்டம்பர்
8. இறகு — 47



செப்டம்பர்
9. ஆத்திசூடி — 50



செப்டம்பர்
வந்த பாதை — 57


மின் நூல்

மதிப்பீடு

# தமிழ் – முதல் பருவம்

## நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களே!

கடந்தகால கற்றலை அடித்தளமாகக்கொண்டு நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற மொழித்திறன்களைக் குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.



முதல் வகுப்பில் கற்றுணர்ந்த கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்புத்திறன், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் போன்றவற்றை நினைவுகூர்ந்து வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் வகையில் விளையாட்டு உலகம் என்ற தலைப்பில் ஆர்வமூட்டும் பல்வேறு செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.



எளிய சொற்களைப் படிக்க வாய்ப்பளித்து மெல்லமெல்ல சிறுசிறு சொற்றொடர்களைப் படித்துப் புரிந்துகொள்ளும் நிலைக்கு இட்டுச்செல்லும் வகையில் பாடப்பகுதிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் பாடப்பகுதிகளில் இடம்பெறும் சொற்கள், தொடர்கள் அனைத்தையும் குழந்தைகள் தாமே முழுமையாகப் படித்தறியும் திறன்பெறுவர்.




சொற்கள், சிறுசிறு தொடர்கள் ஆகியவற்றை விருப்புடன் பங்கேற்றுக் குழந்தைகள் தமக்குரிய நடையில் எழுதுவதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.





கற்பனை, மனமகிழ்வு, தன்னம்பிக்கை, நற்பண்புகள், வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றைப் பெருகச் செய்வனவாக எளிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.



சொற்களற்ற படக்கதைகள், சொற்கள், சிறு தொடர்களுடன் கூடிய படக்கதைகள், உரையாடல் வடிவிலான படக்கதைகள் எனப் பல்வேறு வகையில் படக்கதைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



செய்யுள் பகுதியில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய ஓரடிச்செய்யுள் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆத்திசூடி அடிகள், எளிதில் பொருளுணரும் வண்ணம் படக்கதைகள் வடிவில் வழங்கப்பட்டுள்ளன.



2 STD Tamil Term I Front.indd 8 07/01/2022 19:19:59

www.tntextbooks.in



குழந்தைகள் இயங்கிக்கொண்டே இருப்பவர்கள். அவர்களின் இயங்கும் திறனையும் கற்றலுக்குள் இணைக்கும் வகையில் விளையாட்டுகளும் மொழி விளையாட்டுகளும் அளிக்கப்பட்டுள்ளன.



புதிர்களை விடுவிப்பதும் தேடிக்கண்டறிவதும் குழந்தைகளின் பெருவிருப்பங்களாக உள்ளன. வரைதல் திறனும் குழந்தைகளின் இயல்பூக்கமாக உள்ளது. இவற்றைக் கற்றலுக்குப் பயன்படுத்தும் நோக்கில் பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.






தன்னை உணரவும் வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பிறர் உணர்வுகளை அவர்கள் நிலையிலிருந்து பார்த்து அணுகும் தன்மையை வளர்த்தெடுக்கும் பங்களிப்பையும் இப்பாடநூல் செய்கின்றது. குழந்தைகள் தங்களது மன உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.



இயற்கையை வியக்கவும், போற்றவும் பாதுகாக்கவும் தேவையான நுண்ணுணர்வுகளைப் பெற ஏதுவாகப் பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.



குழந்தைகளும் ஆசிரியர்களும் கலந்துரையாட பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் கருத்துகளையும் உணர்வுகளையும் உள்வாங்கி அவர்களை நெறிப்படுத்த இப்பகுதிகள் உதவும்.



சொல்லிக் கொடுத்தவற்றைத் திரும்பச் சொல்லவைக்கும் மனன முறையை விடுத்து, கலந்துரையாடவும், கேள்வி கேட்கவும், தருக்க முறையில் சிந்திக்கவும் தூண்டும் வண்ணம் குழந்தைகளின் பல்வேறு நுண்ணறிவுகள், கற்கும் பாங்குகள், இயல்புகள், தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அவற்றிற்கு ஈடுகொடுக்கும் நிலையில் பயிற்சி செயல்கள் ஒவ்வொன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்நூல் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தை உணர்ந்து, உரிய கற்றல் செயல்களை வடிவமைத்து மகிழ்வான கற்றலில் குழந்தைகள் ஈடுபட, போதிய வாய்ப்பளித்து, கற்றலை இனிமையான, பயன்மிக்க அனுபவமாக வழங்குகின்ற பெரும்பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றை உணர்ந்து மொழித்திறன்களை வளர்ப்போம். குழந்தைமையைக் கொண்டாடுவோம்! நமது பயணம் மிகப்பெரிது, மிகஇனிது.

வகுப்பறை வண்ணமயமாகட்டும்!

அன்புடன்,

ஆக்கியோர்.



2 STD Tamil Term I Front.indd 9 07/01/2022 19:20:02

# இரண்டாம் வகுப்பு

## முதல் பருவம்

## தமிழ்



2 STD Tamil Term I Front.indd 10 07/01/2022 19:20:02

# 1. விளையாட்டு உலகம்

## பட்டம் பறக்குது!

வண்ணப் பட்டம் பறக்குது
வளைந்து நெளிந்து பறக்குது
மெல்ல மெல்லத் தலையையாட்டி
மேலும் கீழும் பறக்குது

வானில் பட்டம் பறக்குது
வாலை ஆட்டிப் பறக்குது
அங்கும் இங்கும் ஆடியசைந்து
அழகாய் மேலே பறக்குது

வீசும் காற்றில் பறக்குது
வித்தை காட்டிப் பறக்குது
வட்டம் அடிக்கும் பறவையோடு
போட்டி போட்டுப் பறக்குது



பாடலைக் கேட்டு மகிழ்க. பின்தொடர்ந்து பாடுக.

அறிந்த பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் பாடுக.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 1 07/01/2022 18:57:13

## விடை சொல்! உள்ளே செல்!




பிறர் பேசுவதைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்துகொள்க.

# பொருத்து! நிரப்பு!








படங்கள், ஓவியங்களை நுட்பமாக உற்றுநோக்கி தொடர்புகளை அறிக.








அறிந்தவற்றைப் பற்றி சொந்த நடையில் பேசுக.

## வளையம் வீசு! பொருளைப் பெறு!







எனக்குப் பரிசாகக் கிடைத்தவை

**படங்களைப் பார்த்து, பெயர்களைக் கூறி எழுதுக.**

## கண்டுபிடி! காரணம் கூறு!











படங்களை நுட்பமாக உற்றுநோக்கி அறிக.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | பே | ரு | ந் | து | மெ |
| ட் | தே | ங் | கா | ய் | ழு |
| டெ | வெ | ல் | ல | ம் | கு |
| று | டி | நெ | ம் | சே | வ |
| ம் | ட் | தே | ள | வ | த் |
| பு | பெ | ள் | மே | ல் | தி |






**சொற்களை உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.**

www.tntextbooks.in

## படம் பார்! நிகழ்வைச் சொல்!




கதைப் படங்களை நுட்பமுடன் உற்றுநோக்குக. நிகழ்வைக் கூறுக.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 8 07/01/2022 18:58:30

## பெயர் எழுது! பரிசு பெறு!










படங்களைப் பார்த்து, பெயர்களை எழுதுக.

## எழுத்தை நீக்கு! சொல்லை எழுது!




| | | | |
|---|---|---|---|
| ஞ் + ஆ = ஞா | ல் + எ = ___ | ற் + ஐ = ___ | ய் + ஈ = ___ |
| ழ் + உ = ___ | ங் + ஏ = ___ | வ் + இ = ___ | ர் + ஊ = ___ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | ங் | ~~ஞா~~ | கொ | த் | து |
| மீ | ன் | தொ | ட் | லெ | டி |
| பௌ | ர் | றை | ண | யீ | மி |
| ம | யி | ழு | ல் | தோ | கை |
| நெ | ய் | தோ | னே | சை | வி |
| பொ | ரு | ன் | வ | ண் | டு |

☆ பூங்கொத்து ☆ ______________ ☆ ______________

☆ ______________ ☆ ______________ ☆ ______________




சொற்களின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்பு அறிந்து படித்தும் எழுதியும் பழகுக.

## பட்டியலைப் படி!
## பிடித்ததைச் சுவை!











**சொற்களை உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.**

## வரிசைப் படுத்து! வழியைக் கண்டுபிடி!







**சொற்களை அகர வரிசைப்படுத்துக.**



2nd_Tamil_Term-1_Bodypages.indd 12 07/01/2022 18:58:40




**பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடி மகிழ்க.**

## என் சொல் வங்கியில் சேமித்தவை

மைனா, தோசை, கிளி, யானை, நாய்
வெடி, ஆறு, பூனை, வடை, ஏர்

மேளம், குதிரை, காகம், பந்து, நத்தை
சீப்பு, விசிறி, சேவல், முதலை, முயல்

குரங்கு, வானூர்தி
கண்ணாடி, பேருந்து, நெய்தோசை, கரும்பு
தேங்காய், வான்கோழி, வெல்லம், ஐப்பசி

மயில்தோகை, மீன்தொட்டி, பூங்கொத்து, பணியாரம்
பழச்சாறு, எலுமிச்சை, மிதிவண்டி, மசால்தோசை
உண்டியல், நாள்காட்டி

இடியாப்பம், கட்டெறும்பு
மெழுகுவத்தி, பூரிகிழங்கு, சோளப்பிட்டு, பனிக்கூழ்
ஈச்சமரம், ஒலிபெருக்கி, ஊமத்தம்பூ, பல்லாங்குழி

**சொற்களை உரிய ஒலிப்புடன் படித்தும் எழுதியும் பழகுக.**




2nd_Tamil_Term-1_Bodypages.indd 14 07/01/2022 18:58:45

www.tntextbooks.in

வண்ணம் தீட்டி மகிழ்க!



செய்து பார்த்து மகிழ்க!






2nd_Tamil_Term-1_Bodypages.indd 15 07/01/2022 18:58:45

## எப்போதும் நினைவிலிருத்த...

### தமிழ் எழுத்துகள்

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |




2nd_Tamil_Term-1_Bodypages.indd 16 07/01/2022 18:58:47

ஆய்த எழுத்து ஃ

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

www.tntextbooks.in

# 2. சொல்லாதே! சொல்லாதே!



நீலவானம் தூரமென்று
பறவையிடம் சொல்லாதே
பறவையிடம் சொல்லாதே



அடர்ந்தகாடு இருண்டதென்று
கரடியிடம் சொல்லாதே
கரடியிடம் சொல்லாதே



பெரியகடல் ஆழமென்று
மீன்களிடம் சொல்லாதே
மீன்களிடம் சொல்லாதே



கற்பதெதுவும் கடினமென்று
எங்களிடம் சொல்லாதே
எங்களிடம் சொல்லாதே

பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

www.tntextbooks.in

# பயிற்சி

## சொல்லிப் பழகுக

தூரமென்று ஆழமென்று இருண்டதென்று

கடினமென்று கற்பதெதுவும் பறவையிடம்

கரடியிடம் மீன்களிடம் எங்களிடம்

## படித்தும் எழுதியும் பழகுக

பறவை கரடி மீன்கள்

இருட்டு ஆழம் கடினம் தூரம்

நீலவானம் அடர்ந்தகாடு பெரியகடல்

## பொருத்துக

யாருக்கு எது கடினம் இல்லை?

| | | |
|---|---|---|
| 1. பறவை | – | காட்டின் இருட்டு |
| 2. கரடி | – | கற்றுக் கொள்ளுதல் |
| 3. மீன் | – | வானத்தின் தொலைவு |
| 4. குழந்தைகள் | – | கடலின் ஆழம் |

## பேசுவோம் வாங்க!


இப்பாடலில் உங்களுக்குப் பிடித்தவை பற்றிக் கலந்துரையாடுக.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 19 07/01/2022 18:58:50


www.tntextbooks.in

## எனக்கு எது கடினமில்லை வரைக



- வானில் பறப்பேன்
- குழி பறிப்பேன்
- மரம் ஏறுவேன்

- நன்றாகப் பேசுவேன்
- நீரில் நீந்துவேன்
- நடனம் ஆடுவேன்





- வேகமாக ஓடுவேன்
- ஓட்டைச் சுமப்பேன்
- பாடல் பாடுவேன்

- மோப்பம் பிடிப்பேன்
- மரம் ஏறுவேன்
- பாரம் சுமப்பேன்



## ஒத்த ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக

| கரடியிடம் | தூரமென்று |
|---|---|
| | |

## முதல் எழுத்தை மாற்றி எழுதுக

| | | |
|---|---|---|
| ஆடு | பாடு | காடு |
| வால் | | |
| படை | | |
| கல் | | |

## பலமுறை சொல்லிப் பழகுக

சறுக்கு மரத்தில் சறுக்கலாம்
வழுக்கு மரத்தில் வழுக்கலாம்

காற்றிலே பறந்த கீற்று
சேற்றிலே விழுந்தது

உருண்டு விழுந்த உருளை
உருளுது புரளுது



2nd_Tamil_Term-1_Bodypages.indd 20 07/01/2022 18:58:53

# 3. பேசாதவை பேசினால்...









**கட்டளைகளையும் அறிவுரைகளையும் கேட்டுப் புரிந்துகொண்டு செயல்படுக.**


மற்றவருக்கும்
வாய்ப்பு அளிப்பீர்
நான் ஊஞ்சலைவிட்டு இறங்கப் போகிறேன். அவர்கள் ஆடட்டும்
நல்ல பண்பு. மகிழ்ச்சி


கீழே இறைக்காமல் சாப்பிடுகிறாய். பாராட்டுகள்
உணவை வீணாக்காதீர்
உணவை வீணாக்கக்கூடாது. ஈக்கள் மொய்க்கும் அல்லவா!


குப்பையைக்
குப்பைத் தொட்டியில் போடுவீர்
கீழே வீசினால் புல்தரை பாழாகும். குப்பைத்தொட்டியில் போடலாம்
என்னைப் பயன்படுத்தினாய். நன்று

www.tntextbooks.in












2nd_Tamil_Term-1_Bodypages.indd 23 07/01/2022 18:59:04

# பயிற்சி

## படித்துப் பழகுக

| | |
|---|---|
| பூக்களைப் பறிக்காதீர் | மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர் |
| உணவை வீணாக்காதீர் | வருகைக்கு நன்றி |
| தண்ணீரை வீணாக்காதீர் | |

## எழுதிப் பழகுக

பூங்கா   கனவு   பூக்கள்

குடிநீர்   ஊஞ்சல்   குப்பைத்தொட்டி

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. மல்லி சென்ற இடம் கடற்கரை. ☐
2. மல்லி கண்டது கனவு. ☐
3. மல்லி பூங்காவில் பூக்களைப் பறித்தாள். ☐
4. மல்லி தண்ணீர் வீணாகாமல் தடுத்தாள். ☐
5. மல்லியை எழுப்பியவர் அப்பா. ☐

3X2U7

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பூக்கள் | – | குப்பையைத் தொட்டியில் போடுவீர். |
| 2. | ஊஞ்சல் | – | பூக்களைப் பறிக்காதீர். |
| 3. | தண்ணீர்க்குழாய் | – | உணவை வீணாக்காதீர். |
| 4. | குப்பைத்தொட்டி | – | மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர். |
| 5. | உணவு மேசை | – | தண்ணீரை வீணாக்காதீர். |

## வாய்மொழியாக விடை தருக

1. மல்லி பூங்காவில் என்னென்ன செய்தாள்?
2. இக்கதையிலிருந்து நீ அறிந்தவற்றைக் கூறுக.
3. மல்லியின் எந்தச் செயல் உனக்குப் பிடித்திருக்கிறது?

## விடை எழுதுக

1. உணவைக் கீழே இறைக்கக்கூடாது ஏன்?
2. பூங்காவில் எழுதப்பட்டிருந்த ஏதேனும் இரண்டு அறிவிப்புகளை எழுதுக.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 24 07/01/2022 18:59:05

## நீங்கள் இவர்களிடம் என்ன சொல்வீர்கள்?






## இவை பேசினால் என்ன பேசியிருக்கும்? படத்துடன் பொருத்து



படிகளில் பயணம் செய்யாதீர்.

பயணச்சீட்டு வாங்குவீர்.








வரிசையில் நின்று ஏறுவீர்.

கரம், சிரம், புறம் நீட்டாதீர்.




## பொருத்தமான பெயரை உரிய கடையில் எழுதுக

உணவகம் | இனிப்பகம் | பல்பொருள் அங்காடி | ஆடையகம்



# 4. நானும் நாங்களும்


எழில்மா
அண்ணா
எழில் கண்ணு
எழில் தம்பி
எழில்குட்டி
எழிலா
என் பெயர் எழில். இவர்கள் எல்லாரும் என்னை இப்படித்தான் அழைப்பார்கள். இவர்களைப் பற்றிச் சொல்லட்டுமா?



அம்மா எதையும் பொறுமையுடன் கேட்பார். எதையும் முதலில் அம்மாவிடம்தான் சொல்வேன்


அப்பா எனக்கு நிறைய கதைகள் சொல்வார். அவற்றில் எல்லாம் நான்தான் கதைத் தலைவன்


தாத்தாவுடன் வெளியில் செல்வது எனக்குப் பிடிக்கும். அடிக்கடி செல்வேன்


பாட்டி நன்றாகப் பாடுவார். நானும் அவரோடு சேர்ந்து பாடுவேன்


நான் செய்வதையே குட்டித் தங்கையும் செய்து காட்டுவாள். பார்க்கச் சிரிப்பாக இருக்கும்










## மகிழ்ச்சி



நான் நண்பர்களுடன்
விளையாடும்போதும்
உறவினர்களுடன்
இருக்கும்போதும்
மகிழ்ச்சியாய் இருப்பேன்.
நீங்கள் எப்போதெல்லாம்
மகிழ்ச்சியாக இருப்பீர்கள்?

**உன்னுடைய உறவுகள் பற்றி நீயும் கூறலாமே!**

# பயிற்சி

## படித்துப் பழகுக

பொறுமையுடன் கேட்பார்

நன்றாகப் பாடுவார்

செய்து காட்டுவாள்

விளையாடப் பிடிக்கும்

செல்ல நாய்க்குட்டி

## எழுதிப் பழகுக

கதைகள் | கதைத்தலைவன் | நாய்க்குட்டி | உறவினர்

தங்கை | நண்பர்கள் | அடிக்கடி | பாடல்

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. எழில் எதையும் தன் நண்பர்களிடம்தான் முதலில் கூறுவான். ☐
2. எழில் வீட்டில் நாய்க்குட்டி இருக்கிறது. ☐
3. எழிலுக்குக் கால்பந்து விளையாடத் தெரியும். ☐
4. எழில் தாத்தாவுடன் சேர்ந்து பாடுவான். ☐
5. வீட்டிற்கு உறவினர்கள் வந்தால் எழில் மகிழ்ச்சி அடைவான். ☐

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | எழிலின் அம்மா | – | வெளியில் அழைத்துச் செல்வார். |
| 2. | எழிலின் அப்பா | – | நன்றாகப் பாடுவார். |
| 3. | எழிலின் தாத்தா | – | கதைகள் கூறுவார். |
| 4. | எழிலின் பாட்டி | – | எதையும் பொறுமையாகக் கேட்பார். |
| 5 | எழிலின் தங்கை | – | எழிலைப் போலவே செய்து காட்டுவாள். |




## வாய்மொழியாக விடை தருக

1. எழிலைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறுக.

## விடை எழுதுக

1. எழிலை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்கள்?
2. எழில் யாருடன் சேர்ந்து பாடல்கள் பாடுவான்?

## இவர்களை இப்படி அழைத்தால்...

| பிடிக்காது | | பிடிக்கும் | |
| --- | --- | --- | --- |
| கருப்பி |  |  | பட்டுக்குட்டி |
| குண்டுப் பூசணிக்காய் |  |  | செல்லக்குட்டி |
| முட்டைக்கண்ணு |  |  | அழகா |

பிறரைக் கேலி செய்யும் வகையில் அழைப்பது சரியா? கலந்துரையாடுக .


உன்னை எப்படியெல்லாம் அழைப்பார்கள்?

## உறவுமுறையை அறிந்து அழைப்பேன்

| | | | |
| --- | --- | --- | --- |
| 1. | அம்மாவின் | அக்கா | பெரியம்மா |
| | | தங்கை | |
| 2. | அப்பாவின் | தம்பி | |
| | | அண்ணன் | |
| 3. | அம்மாவின் | அண்ணன் | |
| | | தம்பி | |
| 4. | அப்பாவின் | அக்கா | |
| | | தங்கை | |




## என்னைப்பற்றி



1. என் பெயர் அ.க. எழில்
2. என் அம்மா பெயர் கவியரசி
3. என் அப்பா பெயர் அமுதன்
4. எனது ஊர் கோவூர்
5. அலைபேசி எண் 1234567890

1. என் பெயர் ____________________________
2. என் அம்மா பெயர் ___________________
3. என் அப்பா பெயர் ___________________
4. எனது ஊர் __________________________
5. அலைபேசி எண் ___________________

நீ விரும்பும் விலங்கு / பறவையை வரைக. அதை எப்படி அழைப்பாய்? எழுதுக.





2nd_Tamil_Term-1_Bodypages.indd 31 07/01/2022 18:59:38




# 5. வண்ணம் தொட்டு...

வண்ணம்தொட்டு வண்ணம் தொட்டு
படங்கள் வரையலாம்
வானவில்லைத் தொட்டும் கொஞ்சம்
படங்கள் வரையலாம்

நீலம்தொட்டு நீலம்தொட்டு
கடலும் வரையலாம்
கடலலையில் கடலலையில்
கால்கள் நனைக்கலாம்

பச்சைதொட்டு பச்சைதொட்டு
மரங்கள் வரையலாம்
மரக்கிளையில் மரக்கிளையில்
ஊஞ்சல் ஆடலாம்

சிவப்புதொட்டு சிவப்புதொட்டு
பூக்கள் வரையலாம்
பூக்கள்போல பூக்கள்போல
பூத்துச் சிரிக்கலாம்



**பாடல்களைக் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.**



www.tntextbooks.in

# பயிற்சி

## சொல்லிப் பழகுக

வரையலாம் நனைக்கலாம் ஆடலாம்

சிரிக்கலாம் கடலலை

## படித்தும் எழுதியும் பழகுக

வண்ணம் கால்கள்

மரங்கள் கடலலை வானவில் படங்கள்

பூக்கள் மரக்கிளை

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலலையில் | – | படங்கள் வரையலாம். |
| 2. | பூக்கள்போல | – | கால்கள் நனைக்கலாம். |
| 3. | வண்ணம் தொட்டு | – | ஊஞ்சல் ஆடலாம். |
| 4. | மரக்கிளையில் | – | பூத்துச் சிரிக்கலாம். |

## பேசுவோம் வாங்க!

வானவில்லைத் தொட்டு என்னென்ன வரைந்தார்கள்?

## ஒத்த ஓசையில் முடியும் சொற்களை மட்டும் வட்டமிடுக

படங்கள் ஊஞ்சல் கால்கள் மரங்கள்

வரையலாம் நனைக்கலாம் வானவில் சிரிக்கலாம்

## வண்ணம் இது. பொருள்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| வெள்ளை | சோறு | பால் | கொக்கு |
| கருப்பு | | | |
| பச்சை | | | |
| சிவப்பு | | | |

## பாடலைத் தொடர்ந்து பாடுக

கருப்புதொட்டு கருப்புதொட்டு
__________ வரையலாம்
காகம்போல காகம்போல
கரைந்து பார்க்கலாம்

வெள்ளை தொட்டு வெள்ளை தொட்டு
________________ வரையலாம்
________________________________
________________________________

## படத்தையும் சொல்லையும் பொருத்துக













| | |
|---|---|
| முட்டை | மரங்கள் |
| பெட்டிகள் | தட்டுகள் |
| பூ | மரம் |
| முட்டைகள் | பூக்கள் |
| தட்டு | பெட்டி |

## உரிய பன்மைச் சொல்லை எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிட்டாய் | மிட்டாய்கள் | பூ | பூக்கள் | பழம் | பழங்கள் |
| சட்டை | __________ | ஈ | __________ | பட்டம் | __________ |
| பொம்மை | __________ | தேனீ | __________ | பாடம் | __________ |
| மேசை | __________ | புறா | __________ | புத்தகம் | __________ |
| பை | __________ | மைனா | __________ | வண்ணம் | __________ |

# 6. என் கற்பனையில்...

நேயன், நாம் படம் வரையலாமா?




ஓ... வரையலாமே!

என்ன வரையலாம்?

வீடு வரையலாமா?



சரி, எனக்கும் வீடு வரையத் தெரியும். வரையலாமே.

நிலா, உனக்குப் பிடித்தது போல நீ வரை. எனக்குப் பிடித்தது போல நான் வரைகிறேன்.

(இருவரும் வரையத் தொடங்குகின்றனர்)



உரையாடலைக் கேட்டும் படித்தும் புரிந்துகொள்க.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 36 07/01/2022 18:59:49

என் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும்.



என் வீட்டிற்குப் பக்கத்தில் ஆறு இருக்குமே!




என் வீட்டின் இரு பக்கமும் மரங்கள் இருக்குமே!



என் வீட்டிற்கு முன்பக்கம் அழகான பூச்செடிகள் இருக்கும்.



வீட்டிற்கு எனக்குப் பிடித்த நீல வண்ணம் தீட்டுவேன்.



என் வீட்டிற்கு மஞ்சள் வண்ணம் அடிப்பேன்.




என் வீட்டில் எனக்குப் பிடித்த பூனைக்குட்டி வரைவேனே!




என் வீட்டுத் தோட்டத்தில் வாத்துகள் இருக்குமே!



என் வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம்.



என் வீட்டின் படிக்கட்டில் சறுக்குப் பலகை இருக்குமே!



நான் வரைந்து முடித்துவிட்டேன்.

நானும் வரைந்து விட்டேன்.

நீ வரைந்த வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

உன் வீடும் அழகாக உள்ளது.

எது யாருடைய வீடு? கண்டுபிடியுங்கள். எழுதுங்கள்





பெருமிதம்



நாங்கள் வரைந்த படங்களைப் பார்த்து எல்லாரும் பாராட்டினார்கள். பெருமையாக இருந்தது. நீங்கள் எப்பொழுதெல்லாம் பெருமைப்பட்டிருக்கிறீர்கள்?



உனக்குப் பிடித்ததை நீயும் வரையலாமே

www.tntextbooks.in

# பயிற்சி

## படித்துப் பழகுக

| | |
|---|---|
| படம் வரையலாமா | பிடித்ததுபோல |
| இரு பக்கமும் | வீட்டிற்குப் பக்கத்தில் |
| ஊஞ்சல் ஆடலாம் | சறுக்கி விளையாடலாம் |

## எழுதிப் பழகுக

வீடு  தோட்டம்  படிக்கட்டு  மலை

ஆறு  பூனைக்குட்டி  வாத்து  சறுக்குப்பலகை

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. நிலாவின் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும். ☐
2. நேயன் வீட்டின் இரு பக்கங்களிலும் மரங்கள் இருக்கின்றன. ☐
3. நிலாவின் வீடு மஞ்சள் நிறமுடையது. ☐
4. நேயன் வீட்டில் வாத்துகள் இருக்கின்றன. ☐
5. நிலா வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம். ☐

## வாய்மொழியாக விடை தருக

1. நேயன், நிலா வரைந்தனவற்றுள் உனக்குப் பிடித்தவை எவை? காரணம் கூறுக.


## விடை எழுதுக

1. நேயன், நிலா இருவரும் என்ன வரைந்தார்கள்?
2. நேயன் என்னென்ன வரைந்தான்?
3. நிலா வரைந்த வீடு பற்றி இரண்டு தொடர்கள் எழுதுக.




2nd_Tamil_Term-1_Bodypages.indd 39 07/01/2022 18:59:52

## படத்திற்குரிய பெயரை எழுதுக




## எந்த இடம்? என்ன பொருள்? எழுதுக



## என்ன பதில் சொல்லியிருப்பார்கள்?



## யார் என்ன செய்கிறார்கள்?



பெயர்: சிறுமி

செயல்: தூங்குகிறாள்




பெயர்: பட்டம்

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________

www.tntextbooks.in

# 7. விட்டுச் செல்லாதே







எளிய சொற்களையும் தொடர்களையும் உரிய ஒலிப்புடன் உரக்கப் படிக்க.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 43 07/01/2022 19:00:12




## அழுகை

எனக்குப் பிடித்த பொருள்
தொலைந்துவிட்டால், நான் அழுதுவிடுவேன்.
நீங்கள் எதற்கெல்லாம் அழுவீர்கள்?



# பயிற்சி

## படித்துப் பழகுக

| | | |
|---|---|---|
| விட்டுச் செல்லாதே | கிடைத்துவிட்டது | மறந்துவிட்டான் |
| கரிக்கோல் | தேடுவாளே | தெரிந்துவிடும் |

## எழுதிப் பழகுக

| | | | |
|---|---|---|---|
| கரிக்கோல் | பிடிக்கும் | நாளை | மாலை |
| இங்கே | எங்கே | துருவி | அழிப்பான் |

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. பாத்திமா அழிப்பானை வீட்டில் மறந்து வைத்துவிட்டாள். ▢
2. கயல் தனது துருவியை மறந்து பள்ளியில் விட்டுச்சென்றாள். ▢
3. முத்துவிற்குக் கரிக்கோல் கூராக இருந்தால் பிடிக்காது. ▢
4. பாத்திமா, முத்து, கயல் மூவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். ▢
5. பொம்மை போட்ட அழிப்பான் பாத்திமாவினுடையது. ▢

## சொன்னது யார்? பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கயல் என்னை எடுக்காமல் சென்றுவிட்டாள் | – | பாத்திமா |
| 2. | எழுதும்போது பிழையானால் என்னைத் தேடுவாளே | – | கயல் |
| 3. | இங்கேயும் இல்லையே | – | முத்து |
| 4. | இங்கேதானே வைத்தேன் | – | கரிக்கோல் |
| 5. | எங்கே போனது? | – | அழிப்பான் |


## வாய்மொழியாக விடை தருக

1. கரிக்கோல், துருவி, அழிப்பான் இவை மூன்றும் என்னென்ன நினைத்து வருத்தப்பட்டன?

## விடை எழுதுக

1. வகுப்பில் யார் யார் என்னென்ன பொருள்களை விட்டுச் சென்றனர்?
2. விட்டுச்சென்ற பொருள்கள் உரியவர்களுக்குக் கிடைத்தனவா? எப்போது?


## வண்ணமிடப்பட்ட சொல் யாரைக் குறிக்கிறது?




அவள் என்பது

☐ கயல்

☐ பாத்திமா




அவர்களும் என்பது

☐ அழிப்பான், துருவி, கரிக்கோல்

☐ கயல், பாத்திமா, முத்து

## பொருத்தமான சொல்லை எழுதி நிரப்புக

(அது, அவன், அவள், அவை, அவர்கள்)

1. மதி ஒளி இரண்டாம் வகுப்பு படிக்கிறாள்.

   _______________ அழகாக ஓவியம் வரைகிறாள்.

2. வளவன் மிதிவண்டி ஓட்டுகிறான்.

   _______________ கடைக்குச் செல்கிறான்.

3. பயணிகள் பேருந்தில் ஏறுகின்றனர்.

   _______________ சுற்றுலா செல்கின்றனர்.

4. பூனை பால் குடிக்கிறது.

   _______________ எலியைப் பிடிக்கும்.

5. கதைப் புத்தகங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

   _______________ அத்தை வாங்கித் தந்தவை.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 46 07/01/2022 19:00:16



# 8. இறகு

பார்க்கப் பார்க்க அழகுதான்
பளபளக்கும் இறகுதான்
நேற்றுக் கண்டு எடுத்தது
நேர்த்தியான இறகிது

ஏழு வண்ணம் காட்டிடும்
இந்த நல்ல இறகினைக்
கீழே போட்ட பறவையே
கேட்டால் உடனே தருகிறேன்

எந்தப் பறவை போட்டதோ?
எங்குத் தேடி அலையுதோ!
சொந்தக்காரப் பறவையே
வந்து கேட்டால் தருகிறேன்

– அழ. வள்ளியப்பா



2nd_Tamil_Term-1_Bodypages.indd 47 07/01/2022 19:00:17

www.tntextbooks.in

# பயிற்சி

## சொல்லிப் பழகுக

அழகுதான் இறகுதான் எடுத்தது இறகிது

பறவையே தருகிறேன் போட்டதோ அலையுதோ

## படித்தும் எழுதியும் பழகுக

பார்க்கப் பார்க்க பளபளக்கும்

நேர்த்தியான கண்டு எடுத்தது ஏழு வண்ணம்

உடனே தருகிறேன் வந்து கேட்டால்

சொந்தக்காரப் பறவை

## ஒத்த ஓசையுடைய சொற்களைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்த | – | அலையுதோ |
| 2. | அழகுதான் | – | இறகிது |
| 3. | போட்டதோ | – | எந்த |
| 4. | எடுத்தது | – | இறகுதான் |

## பேசுவோம் வாங்க!


இறகைக் கண்டெடுத்த குழந்தை என்ன செய்ய நினைத்தது? ஏன்?





2nd_Tamil_Term-1_Bodypages.indd 48 07/01/2022 19:00:18


## எவை யாருடைய கண்கள் கண்டுபிடி

| | | | |
|---|---|---|---|
| ரைகுதி | னையா | ந்தைஆ | ல்ணிஅ |









## தந்தது யார்?







பறவைக் குஞ்சுகளுக்கு உணவு கொடுத்தது யாராக இருக்கும்? கண்டுபிடித்து வட்டமிடுங்கள்.

# 9. ஆத்திசூடி




## நன்மை கடைபிடி

## ஆத்திசூடி




### நீர் விளையாடேல்



2nd_Tamil_Term-1_Bodypages.indd 51 07/01/2022 19:00:27

## ஆத்திசூடி




நூல் பல கல்

www.tntextbooks.in

## ஆத்திசூடி






ஈரோடு மாவட்டம் சேமூரைச் சேர்ந்த சிறுவன் முகம்மது யாசின். அரசுப்பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கிறான்.

ஒருநாள் பள்ளிக்குச் செல்லும்போது சாலையோரத்தில் ஐம்பதாயிரம் ரூபாயைக் கண்டான். அப்பணத்தை ஆசிரியரின் உதவியுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தான்.

அவனுக்குக் காவல் துறையினர் வாழ்த்து தெரிவித்தனர். பலரும் யாசினைப் பாராட்டினர்.

## நேர்பட ஒழுகு

## ஆத்திசூடி




## நோயினுக்கு இடம் கொடேல்

# பயிற்சி

## படித்தும், எழுதியும் பழகுக

நன்மை கடைபிடி

நீர் விளையாடேல்

நூல் பல கல்

நேர்பட ஒழுகு

நோயினுக்கு இடம் கொடேல்

## பொருத்துக











நூல் பல கல்

நன்மை கடைபிடி


நேர்பட ஒழுகு

நோயினுக்கு இடம் கொடேல்

# தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்


கரிக்கோல்


அழிப்பான்


துருவி

வரைமெழுகு



அடையாள அட்டை


புத்தகப்பை





கரும்பலகை


நாள்காட்டி




மின்விசிறி

மேசை



விளையாட்டுத்திடல்

சாலை



வாயில் கதவு

மதில்



பழச்சாறு

பழப்பாகு



வறுவல்

மெதுரொட்டி



பனிக்கூழ்

தண்ணீர்ப் புட்டி


## வந்த பாதை

### முதல் எழுத்தை மாற்றிப் பறவையின் பெயரை உருவாக்குக

பேருந்து

வாளி

மத்து

மேகம்

சந்தை



### முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் புதிய சொல் உருவாக்குக



கல்

குடை

பனை

நகம்


மலை

### படத்திற்குப் பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக


| வால் | வாள் |
|---|---|



| புலி | புளி |
|---|---|




| கோழி | கோலி |
|---|---|




| வெள்ளம் | வெல்லம் |
|---|---|



| பல்லி | பள்ளி |
|---|---|



| மலை | மழை |
|---|---|



www.tntextbooks.in

## இரண்டாம் எழுத்தை நீக்கிப் புதிய சொல்லை உருவாக்குக

| | |
|---|---|
| பஞ்சு | பசு |
| ஆவணி | |
| சட்டை | |
| பகல் | |
| பாடல் | |
| தவளை | |



## சொல்லுக்குள் மறைந்திருக்கும் சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக

| | |
|---|---|
| பலகை | கை |
| மாமரம் | |
| வெளவால் | |
| கண்ணாடி | |
| விண்மீன் | |

## சொற்படிக்கட்டுகளை நிரப்புக

| | | | | |
|---|---|---|---|---|
| கை | | | | |
| பு | கை | | | |
| ப | ல | கை | | |
| ம | ல் | லி | கை | |
| து | ம் | பி | க் | கை |

| | | |
|---|---|---|
| மை | | |
| | மை | |
| | | மை |

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | | | | |
| பூ | னை | | | |
| பூ | ட் | டு | | |
| பூ | ச் | செ | டி | |
| பூ | ச் | செ | ண் | டு |

| | | |
|---|---|---|
| வா | | |
| வா | | |
| வா | | |



2nd_Tamil_Term-1_Bodypages.indd 58 07/01/2022 19:00:54

## இரண்டாம் வகுப்பு – தமிழ் முதல் பருவம் – கற்றல் விளைவுகள்

### 1. கேட்டல்

- படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை நுட்பமாக உற்றுநோக்கியும் சொல்லக்கேட்டும் சுவைப்பர்.
- கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.
- சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.
- எளிய வாய்மொழி அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர்.
- பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.

### 2. பேசுதல்

- ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுவர்.
- படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுவர்.
- செய்திகளைத் திரட்டும் பொருட்டு வினா எழுப்புவர்.
- பார்த்தவை, கேட்டவைப் பற்றிப் பேசுவர்.
- கேட்டும் படித்தும் அறிந்த பாடல்கள், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுவர்.
- சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலிப்பர்.
- கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுவர். தமக்குரிய நடையில் பேசுவர்.
- கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துவர்.

### 3. படித்தல்

- தமிழ் மொழியின் அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்கண்டு முறையாக உச்சரிப்பர்.
- எளிய சொற்கள், சிறுசிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் உரக்கப் படிப்பர்.
- எளிய சந்தப் பாடல்களை உரிய ஓசையுடன் படிப்பர்.
- எளிமையான சிறுசிறு படக்கதைகளையும் பாடல்களையும் படிப்பர்.
- படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிப்பர்.
- படித்த பகுதியில் கேட்கப்படும் சிறுசிறு வினாக்களுக்கு விடையளிப்பர்.

### 4. எழுதுதல்

- படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்களைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்.
- சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் சொல்லக்கேட்டு எழுதுவர்.
- எளிய பாடல்கள், கதைகள், உரைப்பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு முழுமையான தொடர்களில் விடையளிப்பர்.
- சிறுசிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுவர்.
- கேட்டவற்றை/ படித்தவற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துவர்.

### 5. நடைமுறை இலக்கணம்

- ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குவர்.
- ஒருமை, பன்மை விகுதிகளை (கள், க்கள், ங்கள்) அறிந்து பயன்படுத்துவர்.
- பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை அறிந்து பயன்படுத்துவர்.

### 6. கற்கக் கற்றல்

- படக்கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுவர்.
- பெயர்ப்பலகைகள், அறிவிப்புகளைப் படிப்பர்.
- விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர்.

### 7. சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்

- கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.
- பெயர்ச்சொற்கள்
- வினைச்சொற்கள்
- பதிலிப் பெயர்ச்சொற்கள்
- வீடு, பள்ளியில் உள்ள பொருள்களின் பெயர்கள்
- குடும்ப உறுப்பினர் பெயர்கள்
- தின்பண்டங்களின் பெயர்கள்

### 8. படைப்புத் திறன்

- முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை உருவாக்குவர்.
- குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுவர்.
- கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குவர்.

### 9 . விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்

- விதிகளைப் பின்பற்றுவர்.
- தூய்மை பேணுவர்.
- பொருள்களைப் பாதுகாப்பர்.
- பிறருக்கு உதவுவர்.
- பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவர்.

### 10. வாழ்வியல் தேர்ச்சிக்கான திறன்கள்

- கீழ்க்காணும் வாழ்வியல் திறன்களைப் பெற்று உரிய நேரங்களில் பயன்படுத்துவர்.
- தன்னை அறியும் திறன்.
- சிக்கல் தீர்க்கும் திறன்.
- முடிவெடுக்கும் திறன்.
- கூர்சிந்தனைத் திறன்.
- படைப்பாக்கச் சிந்தனைத் திறன்.
- சிறந்த தகவல் தொடர்புத் திறன்.
- உறவுகளை இணக்கத்துடன் பேணும் திறன்.
- பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்.
- உணர்வுகளைக் கையாளும் திறன்.
- மன அழுத்தத்தைக் கையாளும் திறன்.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 59 20-01-2020 19:36:33

# தமிழ் – இரண்டாம் வகுப்பு

## பாடநூல் உருவாக்கக் குழு

### மேலாய்வாளர்கள்

முனைவர் **ச. மாடசாமி,** பேராசியர் ( ஓய்வு), சென்னை.
திருமதி **ஏ.எஸ். பத்மாவதி** எழுத்தாளர், சென்னை.
திரு. **ச. தமிழ்ச்செல்வன்** எழுத்தாளர், சிவகாசி.

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **வெ. உஷாராணி,** முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

திருமதி **இரா. பொன்மணி ,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர்,
திருவள்ளூர் மாவட்டம்.

### நூலாசிரியர்கள்

முனைவர் **அ. மாசிலாமணி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குருக்கத்தி,நாகப்பட்டினம் மாவட்டம்.

திருமதி **வே. சுடரொளி,** இடைநிலை ஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கொரட்டூர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

திரு. **வெ. ராஜா** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம் ஒன்றியம், சேலம் மாவட்டம்.

செல்வி **பா. ப்ரீத்தி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீர்ப்பனந்தல்,
ரிஷிவந்தியம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திரு. **பா. ச. குப்பன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயந்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **பா. கற்பகம்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயப்பநகர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி **வீ. சௌரீஸ்வரி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குமரன்கட்டம்,
ஆனைமலை ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **அ. கலைவாணி,** பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காளம்பாளையம்,
தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **ச. பஞ்சவர்ணம்,** தலைமை ஆசிரியர், ஊராட்சி
ஒன்றிய தொடக்கப்பள்ளி, தாம்பரம், சானிடோரியம், சென்னை.

திரு. **கு.வ. மகேந்திரன்** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரிய குக்குண்டி,
ஆற்காடு ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **த. ஜெயமாரி,** இடைநிலை ஆசிரியர்,
ஸ்ரீஜெயேந்திர சுவாமிகள் மேனிலைப்பள்ளி,
மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

### ஓவியர்கள்

திரு. **கே.மதியழகன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ. நடு நிலைப்பள்ளி, ஊத்துக்காடு, வலங்கைமான் ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.

திரு. **சோ. வேல்முருகன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு. **த.தா.மு. பிரபுராஜ்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, மணிமங்கலம், குன்றத்தூர் ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. **கோபு சுப்பையன்,**
ஐ திங் கிரியேஷன்ஸ், வடபழனி, சென்னை.

திரு. **கா. தனஸ் தீபக் ராஜன்**

திரு. **கா. நலன் நான்சி ராஜன்**

திரு. **நா. காசி ராஜன்**

திரு. **வேல்முருகன் இராதாகிருஷ்ணன்**

திரு. **பா. பிரமோத்**

### பக்க வடிவமைப்பு

ஓவியர் திரு. **கு. கலைச்செல்வன்,** சென்னை.
செல்வன் ப. **அருண் காமராஜ்,** கணக்கன் குப்பம்.
அ. அடிசன் ராஜ், சி.பிரசாந்த்

### தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்
காமாட்சி பாலன் ஆறுமுகம்

### EMIS தொழில்நுட்பக் குழு

**இரா.மா.சதீஸ்**
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

**இரா. அருண் மாருதி செல்வன்,**
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

**க. ப. சத்தியநாராயணா,**
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.